# காலட்டுவெல் பாதிரியார் தவறுகள்

கட்டுரையாளர்—லண்டன் சுவாமிநாதன் London Swaminathan

Post No. 809 Date–30-01-2014

Comparative Grammar of the Dravidian languages (1856, 2nd Edition 1875) by The Right Reverend Bishop Caldwell.

புத்தக விமர்சனம்

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்- என்ற டாக்டர் கால்டுவெல்' எழுதிய புத்தகத்தைப் படித்தேன். அது ஒரு படித் "தேன்". ஆனால் விஷம் கலந்த தேன்!!

சிந்து சமவெளி நாகரீகம் கண்டுபிடிப்பதற்கு முன்னரே ஆரிய திராவிட விஷ வித்துகளை ஊன்றியதையும், திராவிடக் கழகம், ஜஸ்டீஸ் பார்ட்டி போன்ற கட்சிகளுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்திருப்பதையும், தமிழர்கள் குடியேறிகள் என்றும், சிங்களவர்களை விரட்டி அடிப்பவர்கள் என்று ஆரூடம் கூறுயிருப்பதையும் படித்து வியப்படைவீர்கள். அதுமட்டும் அல்ல, தமிழர்கள் ஏமாளிகள் என்றும் பார்ப்பனர்கள் தமிழுக்கு எதுவுமே செய்யவில்லை, (வடக்கிலிருந்து வந்த ! ) சமணர்கள்தான் தமிழ் இலக்கியத்தை முதல் முதலில் வளர்த்தனர் என்றும்………… புத்தகம் முழுதும் ஒரே தவறுகள் மயம்!!!

சிந்துவெளி நாகரீகம் கண்டுபிடித்தவுடன் வெள்ளைக்காரர்கள் தமிழர்களுக்கு கொடுத்த பட்டம் பயந்தாங்கொள்ளீகள், கோழைகள்!!

ஆரியர்கள் ஓடஓட விரட்டி அடித்தவுடன் தமிழர்கள் காடு மலைகளில் ஒளிந்துகொண்டு நாகரீகத்தை இழந்து மலை ஜாதிமக்கள் ஆகிவிட்டனர். ஒரு பகுதி தெற்கே குமரிவரை ஓடி வந்தனர்!!! என்று எழுதினர். அதற்கு முந்திய கால்டுவெல்லோ, தமிழன் சரியான ஏமாளி, ஆரியப் பார்ப்பனர்கள் வகையாக ஏமாற்றிவிட்டனர் என்று எழுதிவிட்டார். இதோ அவருடைய சொற்களிலேயே இதைப் படியுங்கள்:

புத்தகத்தின் பெயர்:

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்- டாக்டர் கால்டுவெல் (1856)

தமிழில் புலவர் கா.கோவிந்தன், புலவர் தா.சிங்காரவேலு

வள்ளுவர் பண்ணை, சென்னை

முதற் பதிப்பு நவம்பர் 1959 விலை ரூபாய் 20

page 7

“கிறிஸ்து ஆண்டுத் தொடக்கத்திற்கும் முற்பட்ட காலத்திலேயே, சிங்களவர்களைச் சிறிது சிறிதாகத் துரத்திவிட்டுத், தமிழர்கள் குடியேறத் தொடங்கிய இடமாகிய, ஈழநாட்டின் வடபகுதியிலும், வடமேற்குப் பகுதியிலும் தமிழ் பேசப்படுகிறது. ஈழநாடு முழுவதிலும் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் அனைவருமே தமிழர்களே. கொழும்பிலும் பெரும்பகுதி வணிக மக்கள் தமிழர்களே. சிங்களவர்களை அவர்களுக்குரிய தீவில், பயன் தரத்தக்க ஒவ்வொரு தொழிலில் இருந்தும் மிக விரைவிலேயே தமிழர்கள் துரத்திவிடுவார்கள் என்பது நிகழக்கூடாததன்று எனத் தோன்றுகிறது.

page 58

“பிராஹி மொழி, திராவிட இனத்தவர், சிந்து நதிக்கு அப்பால், மத்திய ஆசியாவின் தென் எல்லை வரையும் பரவியிருந்தனர் என்பதைக் காணத்

துணைபுரிகிறது. பஞ்சாபி, சிந்தி முதலிய மொழிகள் தோன்றிய மூலத்திலிருந்தே பிராஹி மொழி தோன்றிற்று எனப் பொதுவாகக் கருதப்படும் என்றாலும், அது திராவிட மூலங்களைத் தெளிவாகவே பெற்றுளது. சிந்து நதிக்கு அப்பால் வழங்கும் ஒரு மொழியில், திராவிட மூலங்கள் காணப்படுவது, ஆரியர், கிரேக்கர், சித்தியர், துருக்கியர் மங்கோலியர் போலவே, **திராவிடர்களும் வடமேற்கு வழியாக வந்து குடியேறியவர்களே எ**ன்பதைக் காட்டத் துணைபுரியும்.

page 70

"தெலுங்கிலும், அதன் தலை சிறந்த இலக்கண ஆசிரியர்களும், புகழ்மிக்க புலவர்களும் பார்ப்பனரே. அவ்வுயர் சாதிக்கரரால் ஆக்கப்படாத இலக்கியம் அம்மொழியில் ஒன்றே ஒன்று உளது. தெலுங்கரில் மிகப் பலராக விளங்கும் பழங்குடித் தெலுங்கர்கள், தம் மொழி வளர்ச்சி, அறிவியல் வார்ச்சிகளோடு, தம்மொழிப் பண்பாட்டு வளர்ச்சியையும், பார்ப்பனர்களிடம் அறவே பறிகொடுத்து விட்டனர் போலும்! தமிழில் இதற்கு மாறாக, ஒரு சில பார்ப்பனரே, வைத்துப்போற்றத் தக்க பேரிலக்கியங்கள் இயற்றியுள்ளனர். தமிழ் இலக்கியங்கள், தமிழர் வழிவந்த தமிழ்ப் பெரும் மக்களாலேயே பேரார்வம் காட்டிப் பெரும்பயன் வாய்க்கும் வகையில் உருவாகி வளம் பெற்றுள்ளன. **தமிழ் இலக்கிய உலகில் உயர்நிலை பெற்றுள்ள ஒரே பார்ப்பனர், ஓர் உரையாசியராவர்**. பார்ப்பனர் ஒருவர், தமிழில் இயற்றிய தலை சிறந்த இலக்கியம், திருவள்ளுவரின் திருக்குறளுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரை ஒன்றே.

(இந்தப் பக்கத்தில் பதிப்பாசிரியர் இப்படி ஒரு அடிக்குறிப்பு சேர்த்துள்ளார்: இக்கூற்று உண்மையன்று; வழிபாட்டிற்குரியவும், தத்துவப் பொருளுமாய இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் பார்ப்பனர் துணைபுரிந்துள்ளனர்.)

(No Brahmins, No Tamil என்ற எனது கட்டுரையில் சங்கத் தமிழ் இலக்கியத்தில் மூன்றில் ஒரு பங்கு பிராமணப் புலவர்களால் இயற்றப் பட்டிருப்பதையும் சங்க இலக்கியம் முழுதும் இந்து மதக் கருத்துகளும்,

கோட்பாடுகளும் போற்றப் பட்டிருப்பதையும் சான்றுகளுடன் காட்டி இருக்கிறேன்.–லண்டன் சுவாமிநாதன்).

page 71

தமிழ் மொழியின் தலையாய இலக்கியங்களாம் என்று, எல்லோராலும் ஒருசேர ஒப்புக் கொள்ளப்பட்ட திருக்குறளும் சிந்தாமணியும், அமைப்பிலும் ஆக்கிய முறையிலும், அறவே சம்ஸ்கிருத தொடர்பற்றனவாம்; முழுக்க முழுக்க முதல் நூல் தன்மை வாய்ந்தனவாம்.

(அறம், பொருள், இன்பம்= தர்ம, அர்த்த, காம என்ற அடிப்படையில் வள்ளுவன் திருக்குறளை அமைத்ததும் திருவள்ளுவ மலையில் பாடிய 55 புலவோரில் மிகப்பலர் இது வேதக் கருத்துகளைத் தமிழில் தந்தது என்று பாராட்டியதும், கால்டுவெல்லே குறிப்பிடும் பரிமேலழகரும் இதை உறுதி செய்வதும் கால்டுவெல்லுக்குத் தெரியவில்லை!!!! சிந்தாமணியின் கதை வடமொழிக் கதை என்பதும் தெரியவில்லை!!!! எனது கட்டுரைகள் ''வள்ளுவன் ஒரு சம்ஸ்கிருத அறிஞன்', 'திருவள்ளுவர் யார்?' 'திருவள்ளுவர் சொன்ன சுவையான கதைகள்' ஆகியவற்றில் மேலும் பல சான்றுகளைத் தந்துள்ளேன்-- லண்டன் சுவாமிநாதன்).

page 76

திராவிட மொழிகள் சம்ஸ்கிருத மொழியிலிருந்து வேறுபடும் ஒவ்வொரு இயல்பிலும், அது வட ஆசிய, மத்திய ஆசிய மொழிகளாகிய சித்திய மொழிகளோடு ஒத்திருப்பதை மொழிநூல் மாணாக்கர் உணராதிரார்.

## மறைவாகக் கிறிஸ்த மதப் பிரசாரம்

142

"திராவிடர்களை இந்துமத வேலிக்குள் கொண்டுவந்து அடைத்தது, (பார்ப்பனர்கள்) போராடிப் பெற்ற வெற்றியின் விளைவன்று; மாறாக அவரிடையே குடியேறி வாழ்ந்து, அவர் தம் உள்ளத்தில் தம் ஆரிய நாகரீக வேட்கையை மெல்ல மெல்லப் புகுத்தியதன் விளைவே ஆகும் என்றே தோன்றுகிறது. ஆரியர்களின் தென்னாட்டுப் படையெடுப்பு பற்றிய செய்தியோ, அவர்கள் திராவிடரை வென்று அடிமைகொண்ட செய்தியோ வரலாறுகளிலோ, புராணங்களிலோ காணக்கூடாதனவாம்.

(கால்டுவெல் சங்க இலக்கியத்தின் 27,000+ வரிகளை 2000+ பாடல்களைக் கொஞ்சமும் படிக்கவில்லை என்பது வெள்ளிடை மலை. பாட்டுக்குப் பாட்டு இந்துமதக் கருத்துகளும், கடவுளரின் பெயர்களும் காமம், பரத்தை போன்ற வடமொழிச் சொற்களும் கரிகால் பெருவளத்தான், பெருநற்கிள்ளி, முதுகுடுமிப் பெருவழுதி செய்த யாகங்களும் கங்கை ,இமயம் புனிதம் என்று பாடி இருப்பதும் சிபிச் சக்கரவர்த்தியை முன்னோர்கள் என்று பாடி இருப்பதும் கால்டுவெல்லுக்குச் சுத்தமாகத் தெரியவில்லை!!!!!!!-- லண்டன் சுவாமிநாதன்).

'சோழர்கள் தமிழர்களா?', 'கரிகால் சோழனின் பருந்து வடிவ யாக குண்டம்' 'தொல்காப்பியத்தில் வருணன்', 'தொல்காப்பியத்தில் இந்திரன்', 'சங்க இலக்கியத்தில் இந்திர விழா', 'தமிழ் இனத்தின் வயது என்ன?', தமிழ் ஒரு கடல்' என்ற எனது கட்டுரைகளில் மேல் விவரம் காண்க.

144/145

"மனுவும், மகாபாரத ஆசிரியரும், பிற புராண ஆசிரியர்களும், திராவிட மன்னர்களை க்ஷத்திரிய குலப் பிறப்புரிமை உடையவராக மதித்துள்ளனர் என்பது உண்மையே என்றாலும்.............. அமைதியாகக் குடியேறி, **வஞ்சப்**

**புகழ்ச்சியால் வாழிடம் பெற்ற ஆரியப் பார்ப்பனர்கள், சூத்திரர் என்று அழைப்பதால் திராவிடர்களுக்குச் சிறப்புப் பெயர் சூட்டி பெருமை செய்வதாக அத் திராவிடர்களை நம்பும்படி செய்திருத்தல் வேண்டும்.**

152

**திராவிட இலக்கிய வளர்ச்சிக்கு முதன்முதலில் வழி வகுத்தவர்கள் சமணர்கள்**.................................தங்கள் பகைவர்களாகிய பார்ப்பனர்களின் மொழிக்கு எதிராகத் திராவிட இனத்தவர் ஒவ்வொருவர்க்கும் உரிய இலக்கியங்களை தனித்தனியே வளர்க்கத் தொடங்குவதற்கு முன்னே.......................

இவ்வாறு புத்தகம் முழுதும் பொன் (புண்) மொழிகளை உதிர்த்துத் தள்ளி இருக்கிறார். "நான் ஒரு முட்டாளுங்க" என்ற திரைப்படப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. ஆயினும் ஏன் ஒரு தமிழனும் இதுவரை கால்டுவெல் கருத்துக்களை விமரிசித்து எழுதவில்லை என்பது வியப்புக்கு உரிய விஷயம். ஆர். சுவாமிநாத ஐயர் என்பவர் மட்டும் கால்டுவெல் கருத்துகளை விமர்சித்து ஆங்கிலத்தில் புத்தகம் வெளியிட்டார். அவரும் மொழியியல் தொடர்பான விஷயங்களை மட்டும் எடுத்துக்கொண்டார். மற்ற விஷயங்களைத் தொடவில்லை.

R Swaminatha Aiyar in his 'Dravidian Theories' (published by Motilal Banrsidas 1975, reiisued 1987) has answered to many of the linguistic issues raised by Bishop Caldwell Linguistic students must read this along with Caldwell's book.

**<u>கி.மு.4004 அக்டோபர் 23 கலை 9 மணிக்கு உலகம் தோன்றியது!!!!!!</u>**

உலகம் கி.மு. 4004 அக்டோபர் 23 காலை 9 மணிக்கு உருவாக்கப்பட்டது என்று கால்டுவெல் முதலிய கிறிஸ்தவப் பாதிரிகள் நம்பியதால் அவர்கள் அனைவரும் காலக் காணிப்பில் தப்பிதம் செய்தனர். அக்காலப் பொது மக்களும் கலீலியோ, கோபர்நிகஸ், மற்றும் பல்லாயிரக் கணக்கான

சூன்யக்காரிகள் போன்றோருக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு அஞ்சி பேசாமல் இருந்துவிட்டனர்.

வெளிநாட்டு அறிஞர்கள் உண்மையானவராக இருந்திருந்தால் வேற்று மத நூல்களில் உள்ள பிழைகளையும், சண்டை சச்சரவுகளையும் பற்றி எழுதியிருப்பர். ஆனால் அவர்கள் மற்ற மத நூல்கள் பற்றி மௌனம் சாதித்தனர். இந்துமத நூல்களை மட்டும் விமர்சனத்துக்கு எடுத்துக் கொண்டு கீழ்த்தரமாக விமர்சித்தனர்! அவர்களுக்கிடையே பிளவுகளை உண்டாக்க எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தினர்.

உலகில் மோதல், சண்டை சச்சரவுகளைக் குறிப்பிடாத மத புஸ்தகமோ, பண்பாடுகளோ இல்லை. அங்கு எல்லாம் இனம் பற்றிப் பேசாத 'அறிஞர்கள்' இந்தியாவில் மட்டும் எல்லாவற்றுக்கும் இனப் பூசல் சாயம் பூசினர். உலகிலேயே நீண்ட காலம் உட்சண்டை போட்ட இனம் தமிழ் இனம் ஒன்றுதான். பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே இருந்த சண்டையைக் கூட 1000 ஆண்டு போர் என்றுதான் வருணிப்பர். ஆனால் சேர சோழ பாண்டியர்கள் 1500 ஆண்டுகளுக்கும் மேலாகச் சண்டை போட்டதை சங்க இலக்கியமும் பிற்காலக் கல்வெட்டுகளும் காட்டுகின்றன. இங்கே ஆரிய–திராவிட வாதம் புகுத்தப்படவில்லை. இதே போல வேத காலம் முதல் இன்றுவரை பல சண்டைகள் நடக்கத்தான் செய்யும். அதில் இனம் என்ற சாயத்துக்குத் தேவையே இல்லை.

**<u>இதுதான் உரைகல்</u>**

இந்திய வரலாறு, கலாசாரம் பற்றி எழுதும் வெளி நாட்டு அறிஞர்களை நியாயமானவர்களா என்று உரசிப் பார்க்க ஒரு உரைகல் உண்டு:

1.அந்த அறிஞருக்கு ஆராய்ச்சிக்குப் பண உதவி செய்தது யார்?

2.அந்த அறிஞர் வேறு மதப் புத்தகம், கலாசாரம் பற்றி ஏதேனும் (நெகட்டிவ்=எதிர்மறை) விமர்சனம் செய்திருக்காரா?

3.அவர் நமது கலாசாரத்தில் ஊறியவரா? அல்லது மாடு தின்னும் புலயனா? குடிப்பவரா? ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்க் கொள்கையை நம்புபவரா?

நமது கலாசாரத்தைப் பின்பற்றாதவர் ஒருவர் நம்மைப் பற்றிக் குறைகூறுவது நம் அம்மா, அப்பாவைக் குறைகூற அடுத்த வீட்டுக்காரனை நமது வீட்டுக்குள்அழைத்து விருந்து வைப்பதற்குச் சமம்.

“வேத நூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர் பாதமும் பொறுப்பளோ பாரத தேவி?” என்று சீறி எழுந்தான் கவிஞன் பாரதி. “ஆயிரம் ஆண்டு அன்பிலா அந்நியர் ஆட்சி” என்று முஸ்லீம் ,கிறிஸ்த ஆட்சியைச் சாடினான் பாரதி. அவனுடைய மதிப்பீடு எவ்வளவு சரி என்பது மேற்கூறிய உரைகல்லில் உரைசிப் பார்க்கையில் தெரிகிறது. பல்கலைக்கழக அறிஞர்கள், பொதுப் பணத்தையும், உள் நோக்கம் கொண்ட அமைப்புகளின் நிதியையும் வாங்கிக்கொண்டு, பிசினஸ் கிளாஸ் விமான டிக்கெட்டில் பயணம் செய்து, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கி, ஆராய்ச்சி செய்கின்றனர்!!! சரியான படி தாளம் போட்டால் உலக ……… மகாநாட்டில் அவர்களுக்குப் பொன்னாடை, விருதுகள் கிடைக்கும்!!

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு --- என்று சும்மாவா சொன்னான் தெய்வப் புலவன் வள்ளுவன்?

சிந்தியுங்கள், செயல்படுங்கள்!

Contact swami_48@yahoo.com